கொடுக்கமுடியும் என்று சொல்லக்கூடிய நிலமை இருக்கிறது. அந்தக் குழந்தைகளைப் பறிகொடுத்தவர்களுக்கு அந்த உதவி கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசாங்கம் விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

''இன்று (14—2—1979) பகல் சுமார் 12·10 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டு அறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, சென்னை, 36/4, இந்திராநகர் வீட்டு வசதி வாரியம் குடியிருப்பில் இருக்கும் திரு. ஆர். குப்புசாமி என்பவர் மகன், திரு. கே. சாரங்கபாணி என்று கூறிக் கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறுங்காவல் (Simple Imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. சு. முத்துசாமி கரையாளர்: தற்காலிகத் தலைவர் அவர்களே, கவர்னர் அறிக்கையிலே சில வார்த்தைகள் பேசலாம் என்று எண்ணுகிறேன். கவர்னர் அறிக்கையைப் பார்த்தால் அதில் விவசாயிகளைப் பற்றி ஏதேனும் ஒன்று சொல்லியிருக்கிறார்களா என்றால் ஒன்றுமே இல்லை என்றே கூறலாம். விவசாய விளைபொருட்களைப்பற்றி எடுத்துக்கொண்டால் நெல்லைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறெதைப் பற்றியும் சொல்லவில்லை. விவசாயி என்றால் நெல்லை மட்டும் தான் விளைவிக்கிறானா? பருத்தியை விளைவிக்கிறான். அதன் விலை எவ்வாறு இருக்கிறது என்று இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? பருத்தி விலை குறைந்துகொண்டே